நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# பிளஸ் 2 மாணவர்களுக்கு ஏப்ரல் 12-இல் இலவச ஆலோசனை முகாம்

பிளஸ் 2 தேர்வு எழுதிய மாணவர்களுக்கு சுகாதாரத் துறையில் உள்ள வேலைவாய்ப்புகள் குறித்த இலவச ஆலோசனை முகாம் சென்னையில் வரும் 12-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

நுங்கம்பாக்கம் கல்லூரி சாலையில் உள்ள சங்கர நேத்ராலயா வளாகத்தில் காலை 9.30 மணி முதல் 12.30 மணி வரை நடைபெறவுள்ள இந்த முகாமில் சுகாதாரம் சார்ந்த அறிவியல் படிப்புகளில் இளநிலை பட்ட, பட்டயப் படிப்புகள் குறித்து மாணவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த முகாம் குறித்து மேலும் தகவல்கள் பெற **94440 33082** என்ற செல்லிடப்பேசி எண்ணைத் தொடர்பு கொள்ளலாம்.

http://www.dinamani.com/edition_chennai/chennai/2015/04/08